இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 11-07-2025

# சமூகநீதி விடுதிகள்!

**“சாதி வேறுபாடுகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் முற்றிலுமாக விலக்கும் பயணத்தின் பல்வேறு படிநிலைகளை நாம் படிப்படியாகத் தாண்டி வர வேண்டும். இதற்கான முயற்சிகளில் திராவிட மாடல் அரசு தொடர்ந்து பயணித்து வருகிறது”** என்று குறிப்பிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அரசுத் துறைகளால் செயல்பட்டு வரும் பள்ளி, கல்லூரி மாணவர் விடுதிகளுக்கு ‘சமூகநீதி விடுதிகள்’ என்ற பெயரைச் சூட்டி இருக்கிறார்கள்.

பல்வேறு பின்தங்கிய பிரிவுகளைச் சேர்ந்த மாணவ மாணவியர் தொடர்ந்து கல்விப் பயின்றிட, நமது மாநிலமெங்கும் பல்வேறு அரசுத் துறைகளின்கீழ் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் துறையின்கீழ் செயல்பட்டு வரும் 727 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் 41,194 மாணவ, மாணவிகளும், 455 மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் 26,653 மாணவ, மாணவிகளும், 157 சீர்மரபினர் விடுதிகளில் 9,372 மாணவ, மாணவிகளும், 20 சிறுபான்மையினர் நல விடுதிகளில் 1,250 மாணவ, மாணவிகளும் தங்கிப் பயின்று வருகின்றனர். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் 1,332 ஆதிதிராவிடர் மாணவர் விடுதிகளில் 98,909 மாணவ, மாணவியரும், 48 பழங்குடியினர் விடுதிகளில் 2,190 மாணவ, மாணவியரும் சேர்ந்து படித்து வருகின்றனர். மொத்தமாக தமிழ்நாடு முழுவதும் உள்ள 2,739 விடுதிகளில் 1,79,568 மாணவ, மாணவியர் பயன்பெற்று வருகின்றனர்.

இந்த விடுதிகள் அனைத்தும் ‘சமூகநீதி விடுதிகள்’ ஆகின்றன. பல்வேறு சாதி சமயப் பிரிவுகளின் பெயர்களின்கீழ் செயல்பட்டு வரும் மாணவர் விடுதிகளின் பெயர்கள் இனி, ‘சமூகநீதி விடுதிகள்’ என்ற பெயரோடு அழைக்கப்பட இருக்கின்றன.

சாதி வேறுபாடுகள், மாறுபாடுகள் அற்ற சமூகநீதிப் பயணத்தில் இது முக்கியமான மைல் கல் ஆகும்.

- ★ **காலனி என்ற சொல் நீக்க உத்தரவு போட்டுள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.**
- ★ **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பட்டியலில் உள்ள சாதிப் பெயரில் இறுதி எழுத்தில் முடிவடையும் ‘N’ மற்றும் ‘A’ என்பதற்குப் பதிலாக ‘R’ என பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்று பிரதமர் மோடியிடம் கோரிக்கை வைத்துள்ளார் முதலமைச்சர்.**
- ★ **25.6.2025 அன்று பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் வெளியிடப்பட்ட அரசாணை, பள்ளிகளில் சமூக நல்லிணக்கம் ஏற்பட பல்வேறு உத்தரவுகளை போட்டுள்ளது.**

இதன் தொடர்ச்சியாக இந்த உத்தரவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிறப்பித்து உள்ளார்கள்.

**‘சூத்திரனுக்கு எதைக் கொடுத்தாலும் கல்வியைக் கொடுக்காதே’ என்ற மனுநீதி கோலோச்சிய சமூகத்தில் அனைவர்க்குமான கல்வியை உறுதி செய்தது நீதிக்கட்சி. அனைவர்க்கும் கல்வி என்ற அடிப்படையில் சமூகநீதி அரசாணைகளை 1920 ஆம் ஆண்டு பிறப்பித்தது நீதிக்கட்சியின் ஆட்சி. குலக்கல்வியை குருகுலக் கல்வியாக முடக்கி வைத்திருந்த சூழலை மாற்றி, ஊர்கள் தோறும் பள்ளிக் கூடங்களைத் திறந்தது அந்த ஆட்சி. ஆதி திராவிடர்களை பள்ளிக் கூடங்களில் சேர்க்க மறுத்தால், அதற்கான அனுமதி அரசாணையை ரத்து செய்வோம் என அரசாணை போட்டது நீதிக்கட்சி ஆட்சி. இதுபோன்ற நடவடிக்கைகள்தான் பல நூறாண்டு இருளை நீக்கி கல்வி ஒளியைப் பாய்ச்சியது.**

**இதில் மண்ணைப் போட முயற்சிக்கும் வகையில் குலக்கல்வி முறையை மீண்டும் கொண்டு வந்தது இராஜாஜி ஆட்சி. நிதி நெருக்கடி என்று சொல்லி கல்விச் சாலைகளுக்கு மூடுவிழா நடத்த நினைத்தார்கள். இராஜாஜி ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து, பச்சைத்தமிழர் காமராசர் ஆட்சியை உருவாக்கினார் தந்தை பெரியார். குலக்கல்வியை தடுத்தது மட்டுமல்ல; ஊர்கள் தோறும் பள்ளிகள் திறந்தார் பெருந்தலைவர். ‘காரணம் பெரியார் - காரியம் காமராஜர்’ என்று தலையங்கம் தீட்டியது ‘ஆனந்த விகடன்’.**

**கல்லூரிக் கல்வியை வளர்த்தெடுத்தார் தமிழினத் தலைவர் கலைஞர். இன்று உயர் கல்வியை, ஆராய்ச்சிக்கல்வியை, உலகக் கல்வியை தமிழ்நாட்டு மாணவ,மாணவியருக்கு வழங்கிக் கொண்டிருக்கிறார் இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

1912 ஆம் ஆண்டு நடேசனார் உருவாக்கியது, ‘திராவிடன் இல்லம்’. சென்னைக்குப் படிக்க வரும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒளிவிளக்காக அமைந்தது. ஆனால் இன்றோ மாநிலம் முழுவதும் ஏராளமான விடுதிகள் அமைந்துள்ளன. 2,739 விடுதிகள் இன்று மாநிலம் முழுவதும் இருக்கிறது. ஒரு லட்சத்து 79 ஆயிரத்து 568 மாணவ, மாணவியர் படிக்கிறார்கள். நீதிக்கட்சி விதைத்த விதை இன்று விருட்சமாகக் காட்சி அளிக்கிறது. ‘படியுங்கள், உங்களது மற்ற தேவைகள் அனைத்தையும் நான் பார்த்துக் கொள்கிறேன்’ என்று முதலமைச்சர் சொல்லிச் செய்து கொண்டிருக்கிறார்.

‘சமூகநீதி விடுதிகள்’ என்று பெயர் சூட்டியதன் மூலமாக நாடு எத்தகைய சமுகநீதி நாடாக மாற வேண்டும் என்ற தனது நோக்கத்தைத் தெளிவுபடுத்தி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள். பல்லாயிரம் ஆண்டு மனித மன அழுக்கைத் துடைப்பது சாதாரணமானது அல்ல. அதற்குப் பல நூறு ஆண்டு முயற்சிகள் தேவை. அத்தகைய முயற்சிகளைச் செய்து காட்டுவதில்தான் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தனித்தன்மை அடங்கி இருக்கிறது.

**சமூகநீதி - சமநீதி - சட்ட நீதி ஆகியவை அனைவர்க்கும் பொது என்ற நிலையை உருவாக்க பங்காற்றி வரும் திராவிட மாடல் அரசுக்குத் தொடர்ந்து துணை நிற்போம்.**



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (9.7.2025) கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கூட்டரங்கில், அனைத்துத் துறை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி. செ. ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம், ஆர். இளங்கோ, திருமதி. க. சிவகாமசுந்தரி, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் செயலாளர் மருத்துவர் ச.உமா, மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல், மேயர் திருமதி. க.கவிதா, காவல் கண்காணிப்பாளர் கா.பெரோஸ் கான் அப்துல்லா மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருச்சி – ஜமால் முகமது கல்லூரி பவள விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!...

முதல் பக்கத் தொடர்ச்சி

கல்விக்குப் பொருளாதாரம் தடையாக இருக்கக்கூடாது என்று, மாணவ - மாணவிகளுக்குத் துணையாக மாதம் ஆயிரம் ரூபாய் என்று ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப்பெண் திட்டம் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டம்!

**தமிழ்ச் சமுதாயம் அறிவுச் சமுதாயமாக வளர்ந்திட புதிய வாய்ப்புகள்!**

அதுமட்டுமல்ல, கல்லூரிக் கனவு - வெற்றி நிச்சயம் என்று பல்வேறு திட்டங்கள் மூலமாக தமிழ்ச் சமூகத்தை அறிவுச் சமூகமாக வளர்த்தெடுக்கிறோம்! புதிய வாய்ப்புகளை உருவாக்குகிறோம்! அந்த வாய்ப்புகளை பயன்படுத்திக்கொண்டு இளைஞர்களாகிய நீங்கள் ஊக்கப்படுத்திக் கொள்ளவேண்டும்! எப்போதும் இளைஞர்களுக்கு துணையாக இருக்கிறோம்!

‘எல்லார்க்கும் எல்லாம்’ என்பதுதான் நம்முடைய Motto! இதுதான் திராவிட மாடல்! கடந்தகால படிப்பினைகளின் நிகழ்கால வாய்ப்புகளை பயன்படுத்திக்கொண்டு எதிர்காலம் வளமாக அமைய வேண்டும்! அந்த எதிர்காலம் என்பது நீங்கள்தான்! கல்வி நமக்கு எளிதாக கிடைத்துவிடவில்லை; நம்முடைய தலைவர்கள் நடத்திய சமூகநீதி போராட்டங்களால் கிடைத்தது! ‘இன்னார்தான் படிக்கவேண்டும்’ என்று இருந்ததை மாற்றி, இன்றைக்கு எல்லோரும் படித்து முன்னேறிக் கொண்டிருக்கிறோம். சமூகநீதிப் போராட்டத்தின் பலன்தான், இன்றைக்கு நாம் பார்க்கின்ற தமிழ்நாடு!

**கல்விதான் யாராலும் பறிக்க முடியாத ஒரே சொத்து!**

மீண்டும் சொல்கிறேன், தமிழ்நாட்டை வளர்த்தெடுக்க மாணவர்களான நீங்கள் ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்று திரள வேண்டும்! நன்றாக படித்து மேலும் மேலும் உயர வேண்டும்! அதற்கு இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்றைக்கும் துணை நிற்பான்! அதேபோல், இசுலாமிய சகோதரர்களின் அரசியல் உரிமைகளையும் காப்பாற்றும் இயக்கமாக திராவிட முன்னேற்றக் கழகம் எந்நாளும் இருக்கும்! இது நான் உங்களுக்குத் தரும் உறுதி!

ஜமால் முகமது கல்லூரியின் கல்விப் பணி நூற்றாண்டுகளைக் கடந்தும் தொடர வேண்டும், வளர வேண்டும், ஒளிர வேண்டும்! கல்விதான் யாராலும் பறிக்க முடியாத ஒரே சொத்து. அதை மாணவர்களுக்கு கொடுப்பதோடு திறன் மேம்பாட்டை வளர்க்கவும், அதற்கேற்ற வசதிகளை வழங்கவும், திராவிட மாடல் அரசு தயாராக இருக்கிறது.

அடுத்து, இளைய சமுதாயத்தை அறிவுச் சமூகமாக வளர்க்க 20 இலட்சம் மாணவர்களுக்கு விரைவில் Laptop தரப் போகிறோம். எங்களின் கல்வி வளர்ச்சித் திட்டங்களுக்கு ஜமால் முகமது கல்லூரி போன்ற நிறுவனங்களும் துணையாக இருக்க வேண்டும். நாங்களும் உங்களுக்கு துணைநிற்போம். அனைவருக்கும் நன்றி, என்னை மன தளவில் உங்கள் வயதிலேயே வைத்திருக்க உதவுகின்ற மாணவர்களுக்கு சிறப்பு நன்றி!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## திருவாரூரில் ஒரே ஆண்டில் இரண்டாம் முறை ஆழித்தேரோடியதோ என

# முதல்வர் பங்கேற்ற ‘ரோட் ஷோ’வில் ஆரூரின் வீதிகளை நிறைத்த மனிதக் கடல்!

## லட்சக்கணக்கான மக்கள் திரண்டனர்!

**திருவாரூர், ஜூலை 11-**

**திருவாரூரில் கள ஆய்வுப் பணிகளுக்காகவும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்தை திறந்து வைப்பதற்கும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவாரூர் மாவட்டம் வருகை தந்ததையொட்டி முதல்வர் பங்கேற்ற பிரமாண்ட ‘ரோட் ஷோ’ நடைபெற்றது. லட்சக்கணக்கானோர் பங்கேற்ற அந்த மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியை தொடர்ந்து கலைஞர் சிலை திறப்பு விழா நடைபெற்றது.**

கள ஆய்வு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வுகளுக்காக திருவாரூர் மாவட்டம் வருகை தந்த தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மதியம் 1:30 மணி அளவில் கலைஞர் கோட்டம் வந்தடைந்தார். மாலை கலைஞர் கோட்டத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தியாக வரலாற்று புகைப்படங்கள் மற்றும் அது குறித்த திரைப்படம் ஆகியவற்றை பார்வையிட்டு, அங்கு வருகை பதிவேட்டில் கையெழுத்திட்டார்.

அதன் பிறகு மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் தாயாரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பாட்டியுமான அஞ்சுகத்தம்மையார் அவர்களின் காட்டூர் நினைவிடத்திற்குச் சென்று வணங்கி, பின்னர் காட்டூர் அருகே உள்ள அருகே உள்ள பவித்ரமாணிக்கம் பகுதியில் “ரோட்ஷோ”வை துவங்கினார்.

சாலையில் இருமருங்கிலும் கடலென குவிந்திருந்த பொது மக்களைச் சந்தித்த முதல்வர் அவர்கள் அவர்களிடம் கை குலுக்கியும், செல்பி மற்றும் புகைப்படங்கள் எடுத்தும், அவரிடம் கொடுக்கப்பட்ட மனுக்களையும் பெற்றுக் கொண்டு, பவித்திரமாணிக்கம், துர்காலயா ரோடு, வடகரை, மேல வீதி, தெற்கு வீதி, பனகல்சாலை மற்றும் பழைய பஸ் ஸ்டாண்ட் ரோடு, ரயில்வே ஸ்டேஷன் ரோடு ஆகிய பகுதிகளில் சாலையில் இரு மருங்கிலும் திரண்டு இருந்த லட்சக்கணக்கான மக்களைச் சந்தித்து மக்கள் கடலில் நீந்துவது போல நீந்தி கலைஞர் சிலை அமைக்கப்பட்டுள்ள இடத்திற்கு வந்தடைந்தார்.

அங்கு திராவிட முன்னேற்றக்கழக திருவாரூர் மாவட்டத்தின் சார்பில் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அவர்களின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்டுள்ள பிரமாண்ட கலைஞர் சிலையை லட்சோபலட்சம் மக்கள் திரண்டிருந்த கூட்டத்திற்கு மத்தியில் தனது கரங்களால் திறந்து வைத்தார்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் திருவாரூர் மாவட்ட மக்கள் கண்ட ஆழித்தேரோட்டத்தில் பங்கேற்ற மக்கள் வெள்ளத்தைப்போல் தற்போது லட்சோப மக்கள் சங்கமித்த முதல்வர் பங்கேற்ற ரோட் ஷோ நிகழ்வை கண்ட மக்கள், இரண்டாம் முறை ஆழ்த்தேரோட்டம் வந்ததோ? என வியக்கும் வண்ணம் கூட்டம் திரண்டதாக மக்கள் வியந்தனர்.

இந்நிகழ்வுகளில் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் கே.என்.நேரு, தமிழ்நாடு தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன், தொடக்க கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன், முன்னாள் அமைச்சர், விவசாய தொழிலாளர் அணி மாநில செயலாளர் உ.மதிவாணன், தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், தாட்கோ தலைவர் நா.இளையராஜா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், ஒன்றிய செயலாளர்கள் வீ.அன்பரசன், ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், தெட்சிணாமூர்த்தி, கே.வி.கே. ஆனந்த், நா.கவியரசு, டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேரி சிவா, பால். ஞானவேல், வீ.எஸ்.ஆர்.தேவதாஸ், இரா.மனோகரன், ப.பிரகாஷ், புலிவலம் ஏ.தேவா, வே.மனோகரன், ஜோதிராமன், பிரபாகரன், ஐ.வி.குமரேசன்.

நகர செயலாளர்கள் ஆர்.எஸ். பாண்டியன், எம்.எஸ்,கார்த்திக், வாரை. பிரகாஷ், வீரா.கணேசன், பா.சிவநேசன், பக்கிரிசாமி, தியாகு, எஸ்.வி.பக்கிரிசாமி, வி.கே.டி.சேரன், ராஜசேகரன், பூண்டி.கே.கலைவேந்தன், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்களம் ஜி.பாலு, நகர மன்ற தலைவர்கள் மன்னை.த. சோழராஜன், புவனப்பிரியா செந்தில்,

பாத்திமா பஷீரா, கவிதா பாண்டியன், திருவாரூர் நகர்மன்ற துணைத் தலைவர் அகிலா சந்திரசேகர், பணங்குடி எ.எஸ்.குமார் உள்ளிட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், லட்சக்கணக்கான பொது மக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.



தகைசால் தமிழர் விருதாளர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் அவர்களை திருச்சியில் அவரது இல்லத்தில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சந்தித்து வாழ்த்தினார். அப்போது ஆசிரியராகப் பொறுப்பேற்று நடத்தும் ”மணிச்சுடர் 40வது ஆண்டு மற்றும் சிராஜுல் மில்லத் நூற்றாண்டு மலரை பேராசிரியர் காதர் மைதீன் அவர்கள் அமைச்சரிடம் வழங்கினார், அதனை பெற்றுக்கொண்டு, அவர் எழுதிய “தேசிய கல்விக் கொள்கை 2020 எனும் மதயானை” நூலினை அமைச்சர் வழங்கினார். இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் மற்றும் முக்கிய பிரமுகர்கள் உடன் இருந்தனர்.